செ.வெ.எண்:24 நாள்:17.09.2018

**ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பு நாள் கூட்டம் 15.10.2018 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன்,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பு நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் வருகிற 15.10.2018 அன்று திங்கள்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் ஓய்வூதியதாரர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தொவித்ததாவது.

ஓய்வூதிய குறை தீர்ப்பு நாள் கூட்டம், இனி வரும் காலங்களில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பிரதி மாதம் 3-வது திங்கள் அன்று நடைபெற உள்ளது. இதன் தொடர்ச்சியாக ஓய்வூதிய குறைதீர்ப்பு நாள் கூட்டம், எதிர்வரும் அக்டோபர் மாதம் 3-வது திங்கள் அன்று (15.10.2018) மாவட்ட ஆட்சியர் தலைமையில் பிற்பகல் 2.30மணிக்கு மாவட்ட அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நேர்முகக் கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடையுமாறு ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றி, ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கு சேரவேண்டிய ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதியப் பலன்கள் இதுநாள் வரையிலும் கிடைக்கப்பெறமால் இருப்பின் இதுகுறித்து தங்கள் குறைகள், பணியாற்றிய அரசு துறை மற்றும் எந்த அலுவலர் மூலம் குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் போன்ற விவரங்களை தெளிவாக ஓய்வூதிய குறை தீர்ப்பு மாதிரிப் படிவத்தில் மனுக்களை இரட்டை பிரதிகளில் கோவை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்குகள்) அவர்களுக்கு 03.10.2018க்குள் கிடைக்கும்படியாக நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ அனுப்பி வைக்கலாம்.

பெயர் மற்றும் முகவரி, பி.பி.ஓ. எண், ஓய்வு பெற்ற நாள், கடைசியாக விகித்த பதவி மற்றும் துறை, குறைகள் விவரம் (தனித்தாளில் விரிவாக எழுதி படிவத்துடன் இணைக்க வேண்டும், முந்தைய தகவல் ஏதும் இருப்பின் விவரம் (Reference), இது தொடர்பாக வழக்கு ஏதும் தொடர்ந்திருந்தால் அதன் விவரம், குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய அலுவலகம் மற்றும் அலுவலர் விபரம ஆகிய விபரங்களுடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்குகள்) அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**